அதிகாரிகளை நியமித்தார்கள், இப்பொழுது இது தேவையில்லை என்று சிபார்சை அனுப்பியிருக்கிறார்கள். தேவையா அல்லவா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. இப்பொழுது 346 இடங்களில் 71 ஹானரரி மெடிகல் ஆபீஸர்கள் தேவைப்படுகின்றனர். மேலும் 64 இடங்களில் காலியாக இருக்கிறது என்ற விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை அரசு மருத்துவமனை.

*497 வின.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுச்சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசாங்க மருத்துவ மனையில் க்ஷயரோகப் பிரிவில் (T. B. Ward) படுக்கைகளை அதிகப்படுத்த வேண்டுமென்கிற வேண்டுகோள் ஏதேனும் அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் முடிவு என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, தற்போது காச நோய் கிராமப் புறங்களிலே அதிகமான அளவுக்குப் பரவி வருகிறது. அத்தனை பேர்களுக்கும் மருத்துவமனைகளிலே இடம் கொடுப்பதற்கு வசதிகள் இல்லை. இந்தக் குறையை நீக்கக் கூடிய முறையில் மாவட்டங்களில் உள்ள எல்லா கிராமப்புறங்களுக்கும் காச நோய்க்கு வைத்திய வசதி செய்யக்கூடிய முறையில் நடமாடும் மருத்துவமனை வைப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் 20 நோயாளிகள் தங்குவதற்குத் தான் வசதியிருக்கிறது. ஆனாலும் 100 பேர்கள் ஒரு நாளைக்கு அங்கே சேர்த்துக் கொள்ளப்படக்கூடிய நிலைமையில் உள்ளது. அந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக தோப்பூர் ஆஸ்டின்பட்டியில் உள்ள மருத்துவ மனையில் அதிகமான படுக்கை வசதிகளைச் செய்வதற்காக முடிவு எடுக்கப்பட்டு அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவிலேயே அதற்குரிய செயல் திட்டங்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களிலேயே உள்ள பெரிய மருத்துவ மனையாக மதுரை மருத்துவமனை இருக்கிறது. ஏறத்தாழ 1,000 பேர்களுக்கும் அதிகமானவர்கள் அந்த நோயுள்ளவர்கள் வெயிட்டிங் லிஸ்டிலே இருப்பதாக அறிகிறேன். அவர்களுக்கு இடம் கிடைப்பதற்கு 2 ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் ஆகக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையில் அதிகமாகக் கஷ்டப்படுகிறார்கள். அதைத் தவிர்க்கக்கூடிய முறையில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க ஆஸ்டின்பட்டி மருத்துவமனையில் விரைவிலேயே ஏற்பாடுகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைத்தான் நான் சொன்னேன். ஆஸ்டின்பட்டி மருத்துவ மனையிலே அதிகமான படுக்கை வசதிகள் செய்து கொடுப்பதற்கு எஸ்டிமேட்டுகள் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். விரைவிலேயே அதைச் செய்து கொடுக்க அரசாங்கம் முயற்சி செய்யும்.